

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (12.7.2025) முகாம் அலுவலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா தனது பிறந்தநாளையொட்டி மனைவியுடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். திருமதி துர்கா ஸ்டாலின் உடன் உள்ளார்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.7.2025) கழக துணை பொதுச் செயலாளரும், மாநிலங்களவை குழுத் தலைவருமான திருச்சி சிவா அவர்களுக்கு சென்னை, அண்ணா அறிவாலயத்தில், ஒதுக்கப்பட்டுள்ள இருக்கையில் அமர்த்தினார். உடன் கழக பொதுச் செயலாளரும், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சருமான துரைமுருகன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, சட்டமன்ற உறுப்பினரும், துணை அமைப்புச் செயலாளருமான தாயகம் கவி, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ்.முருகன் ஆகியோர் உள்ளனர்.




கரூர் மாவட்டக் கழக அலுவலகம், கலைஞர் அறிவாலயம், தளபதி அரங்கில் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் அவைத்தலைவர் டி. ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டக் கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார்.


## தி.மு.க. இளைஞர் அணி



**மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண அறிவிப்பு**

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க, திருவண்ணாமலை மற்றும் திருச்சி மாவட்டங்களுக்கு 2 நாள்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். அங்கு அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:

**14.07.2025 திங்கள்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 10.00 மணி | கே.என்.சேகரன் அவர்களின் இல்லத் திருமண விழா. | சிங்கார மஹால், பாலாஜி நகர், காட்டூர், திருச்சி. |
| காலை 11.00 மணி | ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம். | கலைஞர் அறிவாலயம், திருச்சி. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 12.07.2025

கலைஞர் 100 1924 - 2023




"உங்களுடன் ஸ்டாலின்" முகாம்!

# கரூர் மாவட்டத்தில் 179 இடங்களில் நடைபெறுகிறது!

## மாவட்ட பொதுமக்கள் பயன்பெற வேண்டுகோள் – மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

கரூர், ஜூலை 14 –

கரூர் மாவட்டத்தில் நடைபெற உள்ள "உங்களுடன் ஸ்டாலின் முகாம்களில் பொதுமக்களுக்கு அரசின் திட்டங்கள் சென்றடைய உதவிட வேண்டும் என கரூர் மாவட்ட கழக செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி தெரிவித்தார்.

கரூர் மாவட்ட செயற்குழுக் கூட்டம் கரூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் (கலைஞர் அறிவாலயம்) கரூர் மாவட்ட கழக அவைத் தலைவர் டி. ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. கரூர் மாவட்டக் கழக செயலாளர் வி.செந்தில்பாலாஜி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு

கரூர் புதிய பேருந்து நிலையம், அறிவியல் பூங்கா, கரூர் காமராஜ் மார்க்கெட், வெங்கமேடு மீன் மார்க்கெட் திறப்பு விழா மற்றும் 18331 பயனாளிகளுக்கு நலத்திட்டங்கள் வழங்க அனுமதி வழங்கிய கழகத் தலைவர், முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், கரூர் மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் வரலாற்று சிறப்புமிக்க புதிய பேருந்து நிலையத்தை திறந்து வைத்த கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் இக்கூட்டம் வாயிலாக கோடான கோடி நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

கரூர், அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம், குளித்தலை ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் இருந்து பிஎல்ஏ2, பிடிஏ, பிஎல்சி. மற்றும் பூத் இளைஞர் அணி, பூத் மகளிர் அணி நிர்வாகிகள் 16000 பேர் ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் இக்கூட்டம் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது.

தமிழ்நாடு அரசின் ஊரக பகுதிகளில் 15 அரசுத் துறைகள் மூலம் 46 சேவைகள், நகரப் பகுதிகளில் 13 அரசுத் துறை சார்பில் 43 சேவைகள் அனைத்து மக்களையும் நேரடியாகச் சென்றடைய வேண்டும் என்கின்ற நோக்கத்துடன் கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்துள்ள உங்களுடன் ஸ்டாலின் முகாம்கள் வரும் 15.07.2025 தமிழ்நாடு முழுவதும் தொடங்கு கிறது. கரூர். அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம், குளித்தலை ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளில் 179 இடங்களில் மூன்று மாதம் நடைபெறுகிறது. இந்த முகாம்களில் கழக நிர்வாகிகள் மற்றும் இளைஞர்கள் கலந்து கொண்டு பொதுமக்களின் மனுக்களை அதற்குரிய அதிகாரிகளிடம் அழைத்து சென்று முகாம்களில் தேவையான ஏற்பாடுகளை செய்து பொதுமக்களுக்கு உதவியாகவும், திட்டங்கள் மக்களை சென்றடையும் வகையில் உதவிட வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது ஆகிய தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

கூட்டத்தில், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் கே.சி. பழனிச்சாமி, நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் முனவர் ஜான், வர்த்தக அணி துணைச் செயலாளர் வே.பல்லவி ராஜா, தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பி.விஜயகுமார்,

குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர். இளங்கோ, கிருஷ்ணராய புரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி, கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி பி.சரவணன், மாவட்டக் துணை செயலாளர்கள், எம்.எஸ்.கே.கருணாநிதி, பூவை ரமேஷ்பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, மாவட்ட பொருளாளர் பி.வி.பரத், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சுப.ராஜகோபால், அ.சிவராமன், காலனி செந்தில், ஜி.பாலகுருபரன், எம்.துரைராஜ், கே.சுப்பிரமணி, என்.செல்வராஜ், கழக பொதுக்குழு உறுப்பினர்கள் வி.கரு ப்பண்ணன், என்.எஸ்.ஆறுமுகம், கே.வேலுச்சாமி, விகே.டி.ராஜ் கண்ணு, பி.பி.சரவணன், சி.கருப்பையா (எ) தர்மர், கே.சாமிநாதன், ஈ.ஜாபருல்லா, ஏ.நஞ்சு ண்டேஸ்வரன், ச.சிவகாமி சண்முகம், எம்.சிவசாமி, எஸ்.காளியப்பன், என்.ராமலிங்கம், பி.சிவகாமசுந்தரி, கலாவதி சக்திவேல், பி.ஏ.குமார்,

கரூர் மாநகர செயலாளர் எஸ். பி.கனகராஜ், கரூர் வடக்கு பகுதி செயலாளர் கரூர் கணேசன், கரூர் தெற்கு பகுதி செயலாளர் க. சுப்பிரமணியன், கரூர் மத்திய கிழக்கு பகுதி செயலாளர் ஆர்.எஸ். ராஜா, கரூர் மத்திய மேற்கு பகுதி பொறுப்பாளர் ஆர்.ஜோதிபாசு, கரூர் மத்திய பகுதி பொறுப்பாளர் வி.ஜி. எஸ்.குமார், அரவக்குறிச்சி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் எம்.எஸ். மணியன், அரவக்குறிச்சி கிழக்கு ஒன்றிய செயலாளர் என்.மணிகண்டன், க.பரமத்தி தெற்கு ஒன்றிய செயலாளர் கே.கருணாநிதி, க.பரமத்தி வடக்கு ஒன்றிய செயலாளர் த.கார்த்திக், கரூர் மேற்கு ஒன்றிய செயலாளர் சி.வளர்மதி, கரூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் வி. கே.வேலுச்சாமி, கரூர் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் ப.முத்து க்குமார், தாந்தோணி கிழக்கு ஒன்றிய செயலாளர் எம்.ரகுநாதன், தாந்தோணி மேற்கு ஒன்றிய செயலாளர் கே. பாஸ்கரன், கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் கே. ரவி ராஜா, கடவூர் வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.ராமலிங்கம், கடவூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கே.வீராசாமி (எ) சுதாகர், கிருஷ்ணராயபுரம் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் சி. கதிரவன், கிருஷ்ணராயபுரம் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் எல்.கரிகாலன், குளித்தலை கிழக்கு ஒன்றிய செயலாளர் அ.சந்திரன், குளித்தலை மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் ப.தியாக ராஜன், தோகைமலை மேற்கு ஒன்றிய செயலாளர் இ.ராமர் (முன்னாள் எம்எல்ஏ), தோகைமலை கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜி. அண்ணாதுரை, பள்ளப்பட்டி நகர பொறுப்பாளர் அ.வாசிம் ராஜா, புகழூர் நகர செயலாளர் ஏ.குணசேகரன், புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூர் செயலாளர் க.முரளிராஜா, புலியூர் பேரூர் செயலாளர் கா.அம்மையப்பன், உப்பிடமங்கலம் பேரூர் செயலாளர் சி.தங்கராஜ், கிருஷ்ணராயபுரம் பேரூர் செயலாளர் எம்.சசிக்குமார், பழைய ஜெயங்கொண்டம் பேரூர் செயலாளர் ஆர்.மோகன்ராஜ், மருதூர் பேரூர் செயலாளர் இ.ரவீந்திரன், நங்கவரம் பேரூர் செயலாளர் எம்.முத்து (எ) சுப்பிரமணி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.நாகரத்தினம், பி.காமராஜ், கீதா மணிவண்ணன், எஸ்.காமராஜ், ஏ.அறிவமுகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.


## 12 வது ஆண்டு நினைவு நாள்



14.7.2013

திருமதி **எஸ்.துரைப்பாண்டிச்சி** அம்மாள்
(க/பெ. மறைந்த கலைமாமணி
**எஸ்.எஸ்.சிவசூரியன்** (நடிகர்)

**தாங்கள் இந்த மண்ணை விட்டு மறைந்தாலும் எங்கள் மனதை விட்டு மறையவில்லை!**

மகன்கள்: **எஸ். சிதம்பரம், எஸ். கந்தகுமார், பூச்சி எஸ். முருகன்**
மற்றும் மகள்கள், மருமகன்கள், மருமகள்கள், பேரன்கள், பேத்திகள்


## தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

## கரூர் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி அறிவிப்பு

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மகளிர் தொண்டர் அணியின் **கரூர் மாநகர** அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**கரூர் மாவட்டம்**

**கரூர் மாநகரம்**

அமைப்பாளர் - பி. நிறைமதி 2/ஏ, ராமகிருஷ்ணபுரம் மெயின் ரோடு, செங்குந்தபுரம் அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் - 639001.

துணை அமைப்பாளர்கள் - 1) சி. தங்கமணி 18/இ, சங்கரன் பிள்ளை ஸ்டோர், பாலம்மாள்புரம், கரூர் அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் - 639001. 2) ல. ராதிகா 74,கே.எம்.சி. காலனி, பாலம்மாள்புரம், கரூர்அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர்- 639001. 3) எம். ஜெயலலிதா 301/1, வசந்தம் நகர், கணபதிபாளையம் வடக்கு, தாந்தோணிமலை அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் 639005.

4) பி. தனலட்சுமி 162/ஏ, முதல் கிழக்கு தெரு, திருமாநிலையூர், திருமாநிலையூர் அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் - 639003. 5) வி. சண்முகவள்ளி 60/3, அம்மன் நகர், கருப்பகவுண்டன் புதூர் கிழக்கு பசுபதி பாளையம் அஞ்சல், கரூர் - 639004.

"அண்ணாஅறிவாலயம்"
சென்னை - 18.
நாள் : 12-07-2025

**நாமக்கல் ப.இராணி**
செயலாளர்,
தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

# பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. விளையாட்டு அணி சார்பில் கலைஞர் பிறந்த நாள் விழா!

பெரம்பலூர், ஜூலை 14 -

பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வெ.கார்மேகம் தலைமையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி தி.மு.க. மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டு முன்னாள் முதல்வர் கலைஞரின் அளப்பரிய செயல்கள் குறித்து பேசினர். அதனைத் தொடர்ந்து நூற்றுக்கும் மேற்பட்ட பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பல்வேறு விளையாட்டு பொருட்கள் உபகரணங்கள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் விளையாட்டு அணி பொறுப்பாளர்கள், பள்ளி விளையாட்டு ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் திரளாக கலந்து கொண்டனர்



திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூரில் அரசுமகளிர் கல்லூரி தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், 3.5ஏக்கர் தன் சொந்த நிலத்தை கல்லூரிக்கு தானமாக வழங்கிய மாவட்ட கழக செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ.வுக்கும் கூத்தாநல்லூர் நகர கழக செயலாளர் எஸ்.வி.பக்கிரிசாமி தலைமையில் நகர திமுக சார்பில் நேரில் சென்று நன்றியை தெரிவித்தனர். நகர் மன்ற தலைவர் பாத்திமா பஷீரா மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள்,நகர கழக நிர்வாகிகள் ஊர் பொதுமக்கள் உடன் பங்கேற்றனர்.



பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில், பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆலத்தூர், நாட்டார்மங்கலம், செட்டிக்குளம், மாவிலங்கை, புது அம்மாபாளையம் உள்ளிட்ட கிராமங்களில் ரூ.4.59 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, புதிய திட்டப் பணிகளை பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சிகளில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், ஒன்றிய கழக பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் க.பாண்டியன், துணை பதிவாளர் (பொ.வி.தி) சிவக்குமார், மாவட்ட வழங்கல் அலுவலர் சுந்தரராமன், ஆலத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர் பிரேமலதா, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆர்.அருண், டி.ஆர்.சிவசங்கர் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.